செ.வெ.எண்:118 நாள்.26.02.2018

திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவில், புளியங்குடி நகராட்சி மற்றும் திருவேங்கடம் பேரூராட்சி பகுதிகளுக்கான ரூ.148.74 கோடி மதிப்பிலான கூட்டுக் குடிநீர் திட்ட பணிகளை மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் தொடங்கி வைத்தார்.

-----

திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவில் பாரதி நகர் பகுதியில் சங்கரன்கோவில், புளியங்குடி நகராட்சி மற்றும் திருவேங்கடம் பேரூராட்சி பகுதிகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்ட பணிகள் துவக்க பூமி பூஜை நிகழ்ச்சி இன்று (26.02.2018) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் கலந்து கொண்டு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் பணிகளை தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவில், புளியங்குடி நகராட்சி மற்றும் திருவேங்கடம் பேரூராட்சி மற்றும் விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம், சிவகாசி, திருத்தங்கல் நகராட்சி பகுதிகளுக்கான கூட்டு குடிநீர் திட்டத்திற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் ரூ.543.20 கோடி மதிப்பீட்டில் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது. இத்திட்டம் மத்திய, மாநில அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்பிகளின் பங்களிப்புடன் நிறைவேற்றப்படவுள்ளது. குடிநீர் திட்டத்தின் நீர் ஆதாரமாக கொண்ட நகரம் அருகே தாமிரபரணி ஆற்றின் குறுக்கே பொதுப்பணித்துறையால் அமைக்கப்படவுள்ள தடுப்பணைக்கு முன்னதாக நீர் எடுக்கும் கிணறு மூலம் நீர் எடுக்கப்பட்டு சுத்திகரிக்கப்பட்டு பல்வேறு இடங்களில் நீர் உந்து நிலையங்கள் அமைக்கப்பட்டு விநியோகிக்கப்படவுள்ளது. சங்கரன்கோவில் நகராட்சிக்கு ரூ.51.79 கோடி, புளியங்குடி நகராட்சி ரூ.84.45 கோடி மற்றும் திருவேங்கடம் பேரூராட்சி ரூ.12.50 கோடி என மொத்தம் ரூ.148.74 கோடியில் திருநெல்வேலி மாவட்ட பகுதிகளுக்கு விகிதாச்சார திட்ட மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் தற்போதைய மக்கள் தொகை சங்கரன்கோவில் நகராட்சியில் 63 ஆயிரம், புளியங்குடி நகராட்சியில் 72 ஆயிரம், திருவெங்கடம் பேரூராட்சியில் 9150 நபர்கள் பயன்பெறுவர்கள் இத்திட்டத்தின் கீழ் 2047 ஆம் ஆண்டு மக்கள்தொகை உச்சக்கட்ட அடிப்படையில் பயன்பெறும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. நகராட்சி பகுதியில் நாள் 1 க்கு 1 நபர்க்கு 135 லிட்டர் வீதமும் பேரூராட்சி பகுதியில் 90 லிட்டர் வீதமும் குடிநீர் வழங்கப்படவுள்ளது. இத்திட்டத்திற்கான பணிகளை மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தொடங்கிவைத்தார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய கண்காணிப்பு பொறியாளர் திரு.அருள்தாஸ், செயற்பொறியாளர் திரு.அழகப்பன், சங்கரன்கோவில் நகராட்சி ஆணையர் திரு.தாணுமூர்த்தி, டான்பெட் துணை தலைவர் திரு.கண்ணன் (எ) ராஜூ, ஆவின் சேர்மன் திரு.ரமேஷ், நெசவாளர் கூட்டுறவு சங்க தலைவர் திரு.ஆறுமுகம், நெல்லை கூட்டுறவு பேரங்காடி இயக்குநர் திரு.வேல்சாமி, முன்னால் சட்டமன்ற உறுப்பினர் திரு.சுப்பையாபாண்டியன், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய உதவிசெயற்பொறியாளர் திரு.அக்பர்அலி, உதவி பொறியாளர் திரு.சோமு, நகராட்சி பொறியாளர் திரு.முகைதீன் அப்துல்காதர், முக்கிய பிரமுகர் திரு.வேல்முருகன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.